Registered as a NewsPaper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆடி 27    (11 - 08 - 1992)    செவ்வாய்க்கிழமை    ஓசை 175

## இணக்கமன்று விசாரணைகள் காவல்துறையிடம் ஒப்படைப்பு

தமிழீழ இணக்கமன்றுகள், ஆரம்ப நீதிமன்றுகள் யாவும் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அம் மன்றுகளினால் விசாரணை செய்யப்பட்டு வந்த பிணக்குகள்யாவும் தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பிணக்குகள் யாவும் காவல்துறையினரால் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்படும். என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அவர்கள் அறிவித்துள்ளார். ஏற்கனவே இம்மன்றுகளினால் வழங்கப்பட்ட தீர்ப்புகள்யாவும் காவல்துறையினரால் நடைமுறைப்படுத்தப்படும். வெகு விரைவில் இச் செயற்பாடுகள்யாவும் தமிழீழ காவல்துறையினரால் ஆரம்பிக்கப்படும். இக்கால இடைவெளிக்குள் இம்மன்றுகளினால் ஏற்சனவே வழங்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ( கொப்பேகடுவ இறுதி கிரியையில் கலவரம் )

# கொழும்பில் கொந்தளிப்பான நிலைமை

# அரசுக்கு எதிராக சிங்களவர் கலாட்டா

## வீரவணக்கம்

### லெப் முரளிதரன்

மட்டக்களப்பில் 09-08-92 அன்று நள்ளிரவு 1.30 மணியளவில் பாம்பு தீண்டியதில் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளியான லெப். முரளிதரன் (ஜதீஸ் - தருமரத்தினம் ரவிச்சந்திரன், கண்ணகிபுரம், வாழைச்சேனை) என்பவர் மரணம் அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## படைத் தளபதிகள் பலாலி வந்தனர்

வட பகுதியின் நிலைமையை அவதானிப்பதற்கு சிறிலங்காவின் இராணுவத் தளபதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் மீது கல்வீச்சு கலகப் பொலிஸ் துப்பாக்கிச் சூடு

[கொழும்பு]

கொழும்பில் மிகவும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட சிங்கள மக்களும், பௌத்த பிக்குகளும், ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அரசாங்கத்திற்கு எதிரான கோசங்களை எழுப்பினர் அத்தோடு அமைச்சர்கள் மீது கற்களையும் வீசினர் இதைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த கலகமடக்கும் பொலிசார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகமும், பின்னர் கண்ணீர்ப் புகைப் பிரையோகமும் மேற்கொண்டனர்.

இதேவேளை கொழும்பில் தமிழர்கள் மீது சிங்கள காடையர்கள் தாக்கலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

இறுதிச் சடங்குகளில் வெளிநாடுத் தூதர்களும், அரச அமைச்சர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், முப்படை உயர் அதிகாரிகளும் உட்பட பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

கொப்பேகடுவவின் மரண இறுதி யாத்திரையின் போது, உணர்ச்சி வசப்பட்ட மக்கள் கூட்டம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படாததற்காக அரசைக் குற்றஞ்சாட்டி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கூட்டத்தில் பலர் அரச எதிர்ப்பு

இதேவேளை சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகளில் நேற்றுக கலந்து கொள்ளாமல் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அமைச்சர் ஒருவர் காயப்பட்டார். இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்ட மக்கள் கூட்டம் அமைச்சர்களுக்குக் காட்டிய எதிர்ப்பின்காரணமாகவே அவர்கள் வெளியேறினார்கள்,

இளைஞர்களும், பௌத்த பிக்குகளும் இறுதிச் சடங்கு

செங்கற்களையும், ஓடுகளையும் சரமாரியாக வீசினார்கள். இத்தாக்குதலினாலேயே அமைச்சர் ஒருவருக்குக் கழுத்தில் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்தது.

ஆத்திரமடைந்த மக்கள் கூட்டம் இந்த அமைச்சரை நோக்கி முன்னேறியது. மக்கள் அமைச்சரை அணுகாது தடுக்கும்வண்ணம் அவரின் மெய்ப்பாதுகாப்பாளர் வானத்தை நோக்கிச் சுட்டார். இறுதியில் கலகத்தை அடக்கும் பொலிஸ்படை வரவழைக்கப்பட்டுக் கலகம் அடக்கப்பட்டது கலகமடக்கும்பொலிசார் கலகத்தை அடக்க வானத்தைநோக்கிச் சுட்டும், கூட்டத்தில் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனர். இதேவேளை,

கொழும்பு நகரம் முழுவதும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா பின்னடிப்பு

## வீரச்சாவு

### 2 ஆம் லெப் பிருந்தவராஜ் ஆதரவாளர் ரூபன்

மட்டக்களப்பில் 08-08-92 காலை 2.45 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவரும், ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

2-ம் லெப்டினன்ட் பிருந்தவராஜ் (சின்னத்தம்பி குலேந்திரன், முனைக்காடு, கொக்கட்டிச்சோலை), ஆதரவாளர் யோகநாதன் ரூபகுமார், ரூபன் பாரதி வீதி, மட்டக்களபபு) ஆகிய இருவருமே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பலாலி ஷெல்லினால் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் தெல்லிப்பளை, குப்பிளான் குடிமனைப்பகுதிகளை நோக்கி நேற்று பிற்பகல் 4.00 மணிக்கு ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி ஷெல்கள் குடிமனையை அண்டி வீழ்ந்து வெடித்தன. இதனால் இரத்தினம் பாஸ்கரன் (வயது 16) உரும்பிராய் தெற்கு என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமக்கப்பட்டுள்ளார். (பா)

## தம்புள்ள ஆஸ்பத்திரிக்கு கொப்பேகடுவவின் பெயர்

கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட லெப். ஜெனரல் கொப்பேகடுவ உட்பட மூன்று படையினரின் நினைவாக ஒரு வைத்தியசாலையும், இரண்டு பாடசாலைகளும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சிறிலங்கா ஜனாதிபதியின் பணிப்பின்படி தம்புள்ள ஆஸ்பத்திரி வீரர் டென்சில் கொப்பேகடுவ ஆஸ்பத்திரி எனவும், இராமஞுவ மகாவித்தியாலயம் வீரர் விஜயவிமலரட்ண வித்தியாலயம் என்றும், பரணமக கனிஷ்ட பாடசாலை வீரர் றொகான் ஜயமான வித்தியாலயம் எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## சிறிலங்கா இராணுவ யுக்தியில்

பாட்டம் செய்தார்கள். கூட்டத்தில் பலர் அரச எதிர்ப்பு கோசங்களை முழக்கமிட்டார்கள்.

இளைஞர்களும், பௌத்த பிக்குகளும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்ட மூன்று முக்கிய அமைச்சர்கள் மீது

## பிரேமா பின்னடிப்பு

(கொழும்பு)

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் திட்டத்தை இறுதி நேரத்தில் ஜனாதிபதி பிரேமதாசா கைவிட்டார்.

இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்களின் மனோநிலை அரசிற்கெதிராக இருந்ததைத் தொடர்ந்தே திரு. பிரேமதாசா தனது திட்டத்தை மாற்றியதாகத் தெரியவருகிறது.

## சிந்தனை மாற்றம் அவசியம்

### - பி. பி. ஸி தெரிவிப்பு

(லண்டன்)

சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் பலர் புலிகளின் தாக்குதலுக்குப் பலியாகியதைத் தொடர்ந்து அடியிலிருந்து முடிவரை தமது இராணுவ சிந்தனையை மாற்றியமைக்க வேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக பி. பி ஸி. தனது ஆய்வுரையில் தெரிவித்தது.

விடுதலைப்புலிகளின் முனைப்பான கரந்தடித்தாக்குதல்கள் கடந்த சில நாட்களாக இடம் பெறுகின்றன. அதே வேளை சென்றவியாழக்கிழமை செய்தியாளர் கூட்டத்தில் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் தங்கள் யுத்தியில் அதாவது வியூகம் வகுப்பதில் மறுபரிசீலனையும் மாற்றமும் தேவை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

## சிங்களவர்கள் ஆவேசம் தமிழர் கடைகள் உடைப்பு

(கொழும்பு)

வெள்ளவத்தையில் தமிழருக்குச் சொந்தமான சிகை அலங்கார நிலையம் ஒன்றின் மீது நேற்றுப் பெற்றோல் குண்டு வீசப்பட்டது. இதில் எவரும் காயமடையவில்லை.

வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தின் அருகில் இச்சிகை அலங்கார நிலையம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், கொழும்பு புறநகர்ப் பகுதிகளிலும் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடவத்தையில் இரண்டு தமிழர் கடைகள் உடைக்கப்பட்டன.

சில அதிகாரிகளின் இறுதிச் சடங்குகள் கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு என்று மூன்று நகரங்களில் நடைபெறுவதால் இந்த நகரங்களிலும் பதற்ற நிலை காணப்படுகிறது. பல கடைகள் இந் நகரங்களில் மூடப்பட்டுள்ளன.

ஆனாலும் இறுதிச் சடங்குகளுக்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# புனானையில் 50 தமிழர் படுகொலை

# சிங்கள இராணுவம் வெறியாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புனானையில் ஐம்பதிற்கு மேற்பட்ட தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இக்கிராமத்தில் இருந்த தமிழ் மக்கள் அனைவரையும் உரையாடுவதற்கென கூறி ஒரிடத்திற்கு அழைத்துச் சென்றனர். இவர்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட 500 இற்கு மேற்பட்டோர் இருந்தனர்.

இவ்வாறு கூட்டிச் செல்லப்பட்ட மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியும், வெட்டியும் 50 இற்கு மேற்பட்டோரை சிறிலங்கா இராணுவத்தினர் கொன்றுள்ளனர்.

ஏனையோர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் வெட்டுக்காயங்களுடனும் திசை தெரியாது தப்பி ஓடிவிட்டனர்.

இவர்கள் பிரிந்து பிரிந்து ஓடியமையால் இவர்களின் கதி என்னவானது என்பது பற்றி தெரியவில்லை.

## மகிழ்ச்சி ஆரவாரம்செய்த 20 பொதுமக்கள் கைது

திருக்கோணமலை பாலையூற்று மக்கள் கடந்த சனியன்று டென்சில் கொப்பேகடுவ இறந்த செய்தியைக் கேள்வியுற்று பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்

இதனை அறிந்த சிறிலங்கா இராணுவத்தினர் மறுதினம் காலை இக்கிராமத்தைச் சுற்றிவளைத்து 20 இற்கும் மேற்பட்ட பொதுமக்களை கைதுசெய்துள்ளனர்.

## வெலிக்கந்தவில் 24 தமிழர்கள் முஸ்லிம் காடையரால் கொலை

(கொழும்பு)

ஆயுதம் தாங்கிய முஸ்லிம் கும்பலொன்று பொலநறுவ மாவட்டவெலிக்கந்தைக் கிராமத்தில் நிராயுதபாணிகளான தமிழர்கள்மீது தாக்குதல் நடத்தியது.

நேற்று முன்தினம் நடந்த இச் சம்பவத்தில் குறைந்தது 24 தமிழர்கள் உயிரிழந்தனர் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. மேலும், தமிழர்கள்மீது தாக்குதல் நடத்தியது முஸ்லிம் கும்பல் என்பதை இந்தப் பகுதிப் பொலிசார் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

மேஜர் ஜெனரல் கொப்பேக்கடுவவின் கொலைக்குப் பழிவாங்க தமிழர்கள்மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

# ஜெட் விமானங்கள் குண்டு வீச்சு கர்ப்பிணிப் பெண் பலி: பலர் காயம்

## நாவற்குழியில் கோர சம்பவம்

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படையின் இரண்டு மிகையொலி சுப்பர் சொனிக் விமானங்கள் நாவற்குழிப் பகுதியில் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரு பெண் பலியானார். அவரது கணவன் பிள்ளைகள் மூவர் மற்றும் இருவர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன. அந்த இடத்தில் நின்ற லொறி ஒன்றும் சேதமடைந்துள்ளது.

நேற்றுக் காலை 6. 30 மணியளவில் பேரிரைச்சலுடன் வந்த இரண்டு மிகையொலி விமானங்கள் சரமாரியாக எட்டுக் குண்டுகளை வீசித்தள்ளின நாவற்குழிப் பகுதியில் கண்டி வீதியிலுள்ள அன்ரூஸ் இறால் தொழிற்சாலையை அண்டிய பகுதிகளை நோக்கி இக்குண்டுகள் வீசப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

காட்டின் மரம் உயர
நாட்டின் தரம் உயரும்

## வரி விளம்பரம்

### நாம்பன்கன்று விற்பனை

வாங்க விரும்புவோர் கூறு விலையை 1992-08-15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். கன்றை காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. (சி/4871)

### நல்லின கோழி முட்டைகள் விநியோகம்

நல்லின கோழி வளர்ப்பினை ஊக்குவிக்குமுகமாக அடைவைப்பதற்கேற்ற நல்லின கோழி முட்டைகள் தற்போது யாழ்.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கிராமிய மட்டத்தில் கோழி வளர்ப்பினை விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சிப்பகுதியில் உள்ள கோழிப் பண்ணையில் மாதம்ஒன்றுக்கு 2,000 வரையிலான ரீ- 8, டபிள்யூ - 8 நல்லின கோழி முட்டைகள் அடைவைப்பதற்கென விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சுன்னாகம் காமதேனு பண்ணையிலும் அடைவைப்பதற்கேற்ற நல்லின கோழி முட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.


## 41 ஆம் நாள் என் நினைவாக



| வீர ஜனனம் | | வீரச் சாவு |
|---|---|---|
| 28 | | 03 |
| 12 | | 07 |
| 1974 | | 1992 |

வீரவேங்கை

## இயல்வாணன் (கஸ்ரோ)

(சோமசுந்தரம் கமலநாதன்)
வாரிவளவு காரைநகர்

வெஞ்சமராடிய வேங்கைகளோடே
வீழ்ந்தவன் யானன்றோ
வஞ்சக ரோடிட வகைய்து தேடிய
வரிப்புலியானன்றோ.
அஞ்சுதலின்றியே ஆயுத மேந்திய
அண்ணன் வழி சென்றேன்
பஞ்சுகளிடையே நெஞ்சுரம் கொண்ட
பெருங்கடனாற்றி வென்றேன்

வாழ்வது ஒருமுறை, வாழ்வதா இழிநிலை?
வந்தவர் எமை ஆள
தாழ்வதா எம்மினம் தளையது நீங்கிட
தமிழ்க்குலம் கிளர்ந்தெழுவீர்
வீழ்வது எம உடல் விடியலுக்காகவே
வீண் துயர் ஏன் கொள்வீர்
ஆள்வது எமமினம் நிச்சயம் நிச்சயம்
அணிதிரள்வீர் - தொடர்வீர்.
மாவீரன் இயல்வாணன் (கஸ்ரோ)

நிதர்சனம் நிறுவனத்தில், தொழில்நுட்பவியலாளராகவும், வீடியோ படப்பிடிப்பாளராகவும் புலிகளின்குரல்செய்தி சேகரிப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் கடமை ஆற்றி, 03 07 1992-ல்சட்டைக்காடு யுத்தத்தின போது செய்தி சேகரிக்கும் பணியிலும், படப்பிடிப்பிலும் ஈடுபட்டிருந்த வேளை வீரச்சாவடைந்த எமது மைந்தனின் புகழுடலிற்கு சுன்னாகம் மேஜர் காசி வீதியில் உள்ள எமது இல்லத்திற்கும் நிதர்சனம் நிறுவனத்திற்கும் இறுதி அஞ்சலிக்காக வருகை தந்த போராளிகள், அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதோடு, எமக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கிய நிதர்சன நிறுவனத்தின் பொறுப்பாளர், கஸ்ரோவின் நண்பர்கள், மற்றும் அங்கு கடமைபுரிவோர் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதில் மனம் நிறைவடைகிறோம்.

நாளை 12. 08. 1992இல் எமது மைந்தனின் 41ஆம் நாள் நினைவு தினத்தன்று சுன்னாகம் மேஜர் காசி வீதியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிரியைகளிலும், தொடர்ந்து வழங்கவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

மேஜர் காசி வீதி,
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம். (2950) குடும்பத்தினர்.


## அனித்தா பயிற்சி நிலையம்

- SUGAR CRAFT
- FACIAL
- BRIDAL MAKE UP
- NEEDLE WORK
- COOKERY
- CAKE ICING
- HAIRSTYLE
- FLOWERMAKING

வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கே. கே. எஸ். வீதி,
பூனாறி மரத்தடி,
கொக்குவில்.

(சி-4869)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 2-ம் லெப்டினன்ட் டயஸ்

(செல்வராஜா இராஜேந்திரகுமார்) (பாபு)

| அன்னை மடியில் | கோட்டையின் கொத்தளத்தில் |
|---|---|
| 18-12-71 | 05-08-90 |

திதி: 11-08-92

அன்னியன் பிடியில் சிக்கிய எந்தாயகத்தை மீட்க
அன்னையவள் அரவணைப்பை அறுத்துநீ சென்றாயோ?
கோட்டையிலே இன்று கொடிபறக்க அன்று நீ
கொத்தளத்தில் ஏறிநின்று மாவீரன் ஆனாயோ
ஈராண்டு சென்றாலும் உன்நினைவால் வாடும் நாம்
ஈழப்புலிவீரர் முகத்தில் உன்னைநாம் பார்க்கின்றோம்.

இவருடன் 05-08-90 அன்று யாழ் கோட்டையிலே வீரச்சாவெய்திய 29 மாவீரர்களையும் நினைவுகூர்ந்து அஞ்சலிக்கின்றோம்.

உன்முகம் காணாது தவிக்கும்
இருபாலை குடும்பத்தினர்.
(2988)

## இரண்டு இளைஞர்கள் கரடி தாக்கி படுகாயம்

(வவுனியா)

காட்டில் தேனெடுக்கச் சென்ற இரு இளைஞர்கள் கரடி தாக்கியதால் பலத்த காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி சனகராயன் குளம் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

காட்டிற்கு தேன் எடுக்கச் சென்ற இளைஞர்கள் கரடியைக்கண்டவுடன் மரங்களின் மேல் ஏறிக்கொள்ள முயற்சித்தபோது கரடி இளைஞர்கள் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கியதாம்.

கடைசியாக மரத்தில் ஏறிய தங்கள் சகநண்பன் தாக்கப்படுவதைக்கண்ட மற்றைய இளைஞர்கள் கரடியை நோக்கித் தாக்கத் தொடங்கிய போது கரடி இளைஞர்களை பலமாகத் தாக்கிவிட்டு ஓடி மறைந்துவிட்டதாம்.

இளைஞர்களில் இருவர் தற்போது மல்லாவி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (தி)

## விமர்சனம் கூறுவதால் என்னை ஒதுக்க முடியாது

– அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

இன்று நான் கடுமையாய் விமர்சிக்கப்படுகின்றேன். இதற்குக் காரணம், சலிப்பேதும் இன்றிக் கடமையில் நான் கண்ணும்கருத்துமாய் ஈடுபட்டிருப்பதுதான். விமர்சனங்களை நான் வரவேற்கின்றேன். இதனால் நான் கிஞ்சித்தும் கவலையடையவில்லை. விமர்சனங்களைக் கூறி, மக்கள் சேவையில் இருந்து என்னைத் தள்ளி வைத்துவிட முடியாது. எனது வாழ்நாள் முழுவதும் மக்கள் சேவை செய்யவே நான் விரும்புகின்றேன். இவ்வாறு செள தொண்டமான் வெறக்கா பொகலையில் தொழிற் துறை விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

### சம்பள அதிகரிப்பு இன்னும் இல்லை

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் 90ஆம்ஆண்டிற்கான வருடாந்த சம்பள உயர்வினை வழங்கும்படி 90ஆம் ஆண்டு 6ஆம் மாதம் 15ஆம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபம் ஒன்று தெரிவிக்கின்றது.

ஆனால் இரண்டுவருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லையென ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது

## முதலாம் ஆண்டு நினைவு



[illegible] இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை வின்சனின் (வேலுப்பிள்ளை சந்திரகுமார் வடலியடைப்பு) ஓராண்டு நினைவுநாள்கடந்த8-8-92இல் இடம் பெற்றது.

## நினைவு கூருகின்றோம்..

### 1992 - 08 - 11

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சுன்னாகம் சிறிலங்கா காவல் நிலையத்தில் பொறிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

**சஞ்சீவி** [வைத்திலிங்கம் மகேசநாதன் - வீரமாணிக்க தேவன்துறை, மயிலிட்டி, யாழ் ]

**நிக்கி** [வைத்திலிங்கம் நிகேதரன் - ரயில நிலைய வீதி, சுன்னாகம், யாழ்.]

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1985 ஆம் ஆண்டு யாழ். தாவடிச் சந்தியில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்திருந்து யாழ். மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

**பிடல்** [சர்வானந்தன் சசிகுமார் - சாள்ஸ் வீதி, கோண்டாவில் மேற்கு, யாழ்.]

1987 ஆம் ஆண்டு சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**2-ம் லெப். அப்பன்** [வெற்றிவேலு சிவசிறி - இத்தாவில, பளை]

**2-ம லெப். சதீஸ்** [சற்குணநாதன் பிரகலாதன் - உசன், மிருசுவில், கொடிகாமம், யாழ்.]

## 41 - ம் நாள் நினைவஞ்சலி



## நெஞ்சம் மறக்குமா?

## 41-ம் நாள் நினைவஞ்சலி

தாயின்
மகிழ்விற்காய்
08.08-1975



தாயக
விடிவிற்காய்
02-07-1992

02 - 07 - 1992 அன்று மாந்தீவில் வீரசாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை

### லெப். மறவன் (வில்வம்)

(ஜெயபால் பெர்னாண்டோ பீலிக்ஸ் றெனால்ட் வெற்றிலைக்கேணி)

தமிழ்மானம் காக்க புறப்பட்ட தனயா
தமிழீழ மீட்பில் தந்திட்டாய் உனையே
தாங்க முடியாது தவிக்கும் உள்ளங்கள்...
தூங்க முடியாது தடுக்கும் துயரங்கள்..
மாந்தீவு மண்ணோடு மண்ணாகிப் போனவனே
மலர்ந்திடும் பூக்களின் மணமாகிப் போனவனே
மறக்க முடியுமா மறவனே உன்னை
மறுக்க முடியுமா நின்வீரந் தன்னை
துடிக்கும் நம்கரங்கள்
தூக்குமுன் துப்பாக்கி
வெடிக்கும் பெரும்போர்
கிடைக்குந் தமிழீழம்.

11-08-1992 இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியில் கலந்துகொள்ளுமாறு போராளிகள், பொதுமக்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- குடும்பத்தினர்

இன்பு வீதி,
புலோலி தெற்கு,
புலோலி.

(சி 4865)

---

## நெஞ்சம் மறக்குமா?





| வீரவேங்கை<br>**சஞ்சீவி**<br>(வைத்திலிங்கம் மகேசநாதன்) | | கப்டன்<br>**நெடுமாறன்**<br>(வைத்திலிங்கம் கணேசநாதன்) |
|---|---|---|
| 1960.06.01 | < பிள்ளைக் கனியாய் > | 1964.01.17 |
| 1984.08.1 | < வீரத்தின் விதையாய் > | 1989.08.30 |

(யாழ் - சுன்னாகம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்காக் காவல் நிலையத்தில் படையினரின் பொறிவெடியில் சிக்கியதில் வீரச்சாவு)

(யாழ் - மாவிட்டபுரம் பகுதியில் இந்தியப் 'பரா' அதிரடிப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவு)

உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில்
உங்கள் தடங்கள்
எங்கள் நிலத்தினில்
உங்கள் உறுதி
எங்களிடத்திலும்

பெற்றோர், சகோதரர்,
நண்பர்கள்

வீரபாணிக்கதேவன்துறை,
மயிலிட்டி

(சி-4827)

---

2-ம லெப். அப்பன் [... தாவில, பளை]

2-ம லெப். சதீஸ் [சற்குணநாதன் பிரகலாதன் - உசன், மிருசுவில், கொடிகாமம், யாழ்.]

கருணா செல்லத்துரை தயாகரன - எழுதுமட்டுவாள் தெறகு, சாவகச்சேரி, யாழ் ]

கமல் [கனகலிங்கம் சிவனேசன் - மீசாலை தெறகு, சாவகச்சேரி, யாழ் ]

1989 ஆம் ஆண்டு பண்டத்தரிப்பல் இநதியப படையினரால் சுடடுக கொலலபபடட பெண உடபட 2 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு பாம்பு கடித்ததில் எம்மைப் பிரிந்த -

2-ம லெப. தான்பரீன் [செ. பேசுதாசன் - தாமரைகுளம, அடம்பன், மன்னார்]

சுண்டிக்குளததில் சிறிலங்கா கடறபடையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

மதன் [திருக்கோணமலை]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்.

சம்மாந்துறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 37 தமிழர்கள்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட இளைஞர்கள் உட்பட வந்தாறுமூலை, ஐயங்கேணி, சித்தாண்டிப் பகுதிகளைச் சேர்ந்த 3 தமிழர்கள் - சுற்றிவளைப்பின்போது படுகொலை செய்யப்பட்ட நொச்சிமுனை அனுமார் வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - சிங்களக் காடையர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட கொம்மாந்துறையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ் மத்திய கல்லூரி மாணவன் - கொல்லங்கலட்டிப் பகுதியில் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

கப்டன் அன்ராஜ் [இராமச்சந்திரன் சங்கர் - பாலம்பெருமாள்கட்டு, வட்டக்கண்டல், மன்னார்]

துப்பறி [குணபாலசிங்கம் திருக்குமாரன் - மீசாலை வடக்கு, கொடிகாமம்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4868]

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

அடிமைத்தனத்தை அறுக்கும் ஆற்றல், அடிமை ஒவ்வொருவன் சொந்தக் கையிலே உள்ளது.

- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## தமிழருக்கு புலிகள் பெற்றுக் கொடுத்த வெற்றி

ஊர்காவற்றுறை - அராலிச் சந்திக்கண்மையில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதல் அவர்களுக்குப் பெரு வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளதாக அரசியல், இராணுவ விமர்சகர்களும், செய்தியாளர்களும் தெரிவிக்கின்றார்கள். ''இது புலிகளுக்கு பெருவெற்றி" என அரசியல் விமர்சகர் குருஸ் தெரிவித்தார். ''இராணுவத்திற்கு எதிரான இவ்வளவு பெரிய வெற்றியை புலிகள் இதுவரை ஈட்டியதில்லை'' என ஏ.எப்.பி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

இதேபோன்றே கொழும்பிலுள்ள அரசியல் விமர்சகர் ஒருவர் ''சிறிலங்கா இராணுவம் தனது அரசியல் வரலாற்றில் சந்தித்த இழப்புக்களில் மிக மோசமான இழப்பை கடந்த சனிக்கிழமை சந்தித்தது'' என்றார்.

அரசியல் இராணுவ விமர்சகர்களின் கூற்றுக்களையும், விமர்சனங்களையும் உறுதிப்படுத்துவது போலவே சிறிலங்கா அரசியற் தரப்பினதும், இராணுவத் தரப்பினதும் அறிக்கைகளும் அமைந்துள்ளன.

இம்மரணங்கள் குறித்து கருத்து வெளியிட்ட சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ''வட பகுதியில் முக்கியம் வாய்ந்த பத்து சிரேஷ்ட அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் முழு நாட்டையுமே துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது'' என்றார். பிரதம மந்திரியும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜய துங்கா ''இந்த உலகில் சிறியகாலமே தங்கிருக்கும் நாங்கள் ஏன் ஒருவருடன் ஒருவர் குறை காண்கிறோம் என்பது எனக்குப் புரியவில்லை'' என்றார்.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவோ, மரணமடைந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்காக துக்கதினம் அனுஷ்டிக்கும் வகையில் ஒரு நாளை தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்தும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

அதாவது தமது அரசியல் அபிலாசைகளுக்காகவும் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காகவும் இராணுவத் தீர்வொன்றிற்கு ஊக்கமும், ஒத்தாசையும் நிதியும் அளித்துவரும் ...

# விடுதலைப்புலிகளும் மதசுதந்திரமும்

## - ஒரு கொள்கை விளக்கம் -

மதம் சம்பந்தமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன? விடுதலைப் புலிகள் மதத்திற்கு விரோதமானவர்களா? மதவழிபாட்டுச் சுதந்திரத்திற்கு எதிரானவர்களா? மதம் பற்றி விடுதலைப் புலிகளின் சித்தாந்த கருத்துப் பார்வை என்ன? இவ்விதமாக மக்கள் மத்தியில் எழுப்பப்படும் கேள்விகளுக்குத் தெளிவான கொள்கை விளக்கத்தை அளிக்க முயல்கிறது இக் கட்டுரை.

மதம் சம்பந்தமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை எமது கொள்கைத்திட்டப் பிரகடனம் தெட்டத்தெளிவாக எடுத்து விளக்குகிறது. அதில் கீழ்க்கண்ட வாறு சொல்லப்படுகிறது:

''தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மதசார்பற்ற நிலைப்பாட்டைக்கடைப்பிடிக்கும். அதே வேளை சகல மதங்களையும் சார்ந்த மக்களினதும் அடிப்படை உரிமையான வழிபாட்டுச் சுதந்திரத்திற்கு, எமதுஇயக்கம் உத்தரவாதமளிக்கும். சகல மதத்தவர்களும் தமது ஆன்மீக அபிலாசைகளைப்பூர்த்திசெய்யவும், மத - கலாசாரப் பண்புகளைப் பேணி வளர்க்கவும் எமது இயக்கம் ஊக்கமளிக்கும்''.

புலிகளின் கொள்கைப் பிரகடனத்தில் இரத்தினச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ள இந்த விளக்கம், மதம் சம்பந்தமாக மூன்று முக்கிய அம்சங்களை முதன்மைப்படுத்துகிறது.

ஒன்று. மதசார்பற்ற நிலை. இரண்டாவது, மக்களின் வழிபாட்டுச் சுதந்திரம். மூன்றாவது தமிழரின் தேசிய பண்பாட்டு வாழ்வு

இந்த மூன்று அம்சங்களையும் இனி விரிவாகப் பார்ப்போம்

விடுதலைப் புலிகள் இயக்கம் மதசார்பற்றது எனும் பொழுது, எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் சார்ந்ததாக நிற்கவில்லை என்பது தான் அர்த்தம். தமிழீழ மக்கள் தழுவிக்கொண்ட சகல மதங்களையும் அரவணைத்து கௌரவித்து, சகல மதத்தவர்களுக்கும் பொதுவாக நின்று நடுநிலையைக் கடைப்பிடிப்பதுதான், மதசார்பற்ற நிலையாகும்.

தமிழ் இன ஒருமைப்பாட்டையும், தேசிய சுதந்திரத்தையும் இலட்சியமாக வரித்துக் கொண்ட ஒரு விடுதலை இயக்கம், மதசார்பான கொள்கையைக் கடைப்பிடிப்பது தவறானதாகும். இந்தக் குறுகிய மதவாதப்போக்கு தமிழ் இன ஒற்றுமைக்கும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பெரும் முட்டுக்கட்டையாக அமையும். இதனைக் கருத்திற் கொண்டுதான் எமது இயக்கம், ஆரம்பகாலத்திலிருந்தே மதசார்பற்ற நடுநிலையைத் தழுவிக்கொண்டது.

சிங்கள அரசு மதசார்பானது. ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு, அதாவது பௌத்த மதத்திற்கு தேசிய அந்தஸ்தும் கௌரவமும் வழங்கி, ஏனைய மதங்கள் சார்ந்த மக்களை அந்நியப்படுத்தியது. இந்தக் குறுகிய மதவாதப் போக்கு சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு வழி கோலி, சிங்கள தமிழ் தேசிய இன முரண்பாட்டைத் தீவிரமடையச் செய்தது. சிங்கள தேசத்து மதவாத, இனவாத ஒடுக்குமுறையைச் சந்தித்து நிற்கும் தமிழ்த் தேசிய இனம் மத நம்பிக்கைகளின் அடிப்படையில் பிளவுபட்டு நிற்க முடியாது; அது எமது தேசியப் போராட்டத்தைப் பலவீனமடையச் செய்யும். எமது மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வழி நடத்திச் செல்லும் விடுதலை இயக்கம் என்றவகையில் புலிகள் இயக்கம் மதசார்பற்ற நிலையைத் தழுவி, மதங்களுக்கு அப்பால்நின்று இன ரீதியில் தேசிய ரீதியில், எமது மக்களை அணிதிரட்டி ஐக்கியப் படுத்தும் அணுகு முறையைக் கடைப்பிடித்து வருகிறது.

தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கம் என்ற ரீதியில் நாம் எமது மக்களின் அடிப்படையான சுதந்திரங்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி வருகிறோம். இதில் வழிபாட்டுச் சுதந்திரம் முக்கியமானது. இறை வழிபாடு மனிதர்களின் அடிப்படையானஉரிமை புனிதமான இந்த உரிமையை எமது இயக்கம் கௌரவிக்கிறது.

மெய்யுண்மையைத் தரிசிக்க விழையும் மனிதனின் ஆன்மீகத் தேடுதலானது எல்லாக் காலங்களிலும் எல்லாச்சமூகங்களிலும் ஒரு முடிவில்லாத இலட்சியப் பயணமாகத் தொடர்கிறது. வாழ்வியக்கத்தின் அர்த்தத்தையும், பிரபஞ்சத்தின் அற்புதத்தையும் புரிந்து கொள்ள விழையும் மனிதத்தின் மிகவும் ஆழமான அபிலாசையாக, இந்த விழைதல் தொடர்கிறது. ஆன்மீகமும் சரி, விஞ்ஞானமும் சரி இந்த விழைதலின் தோற்றப்பாட்டையே குறித்து நிற்கின்றன.

எந்த வழியிலோ, எந்த வடிவத்திலோ உண்மையைத் தேடும் உரிமை மனிதனுக்கு உண்டு. இது அவனது ஆன்மீக உரிமை தனது ஆன்மீக அபிலாசைகளுக்கு திருப்தி காணும் வகையில் ஒரு மனிதன் சிந்திப்பதும், செயல்படுவதும், தேடுவதும், நம்புவதும், நம்பாமல் விடுவதும், வழிபடுவதும், வழிபடாமல் விடுவதும் அவனுக்கே உரித்தான தனிமனிதச் சுதந்திரமாகும். இந்த வகையில் வழிபாட்டு உரிமையானது மனிதனின் சிந்தனைச் சுதந்திரத்தைச் சார்ந்து நிற்கிறது. இந்த உரிமையை எமது விடுதலை இயக்கம் மதிக்கிறது; கௌரவிக்கிறது ஏனென்றால் இது சுதந்திரமான மனித வாழ்விற்கும், உன்னதமான மனித வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.

மத வழிபாடு எமது மக்களின் பண்பாட்டு வாழ்வுடன் இழையோடி நிற்கிறது பண்பாட்டு வாழ்வு எமது தேசியத்திற்கு ஆதாரமானது. எமது தேசியம் ஒரு சுதந்திர அரச நிர்மாணத்திற்கு அத்திவாரமானது.

தேசிய உரிமைப்பாட்டின் அடிப்படையில் தன்னாட்சி கோரி ஒரு வீர சுதந்திரப் போரை நடத்தி வரும் விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது மக்களை தேசிய ரீதியில் தேசிய மக்கள் சக்தியாக அணிதிரட்டுவது எமது அடிப்படை அரசியல் இலட்சியம். இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதாயின் எமது தேசியத்திற்கு ஆதாரமாகவும் எமது தேசியக் கட்டுமாணத்திற்கு தூண்களாகவும் விளங்கும் எமது பண்பாட்டு வடிவங்களை பேணிப் பாதுகாப்பது, அத்தியாவசியமானது. இந்த வகையில், தமது பண்பாட்டுக் கோலமாக எமது மக்கள் வரித்துள்ள மத வாழ்வுக்கு, நாம் மதிப்பளிக்கிறோம். அந்த மத வழிபாட்டு வாழ்வின் மேம்பாட்டுக்காக எமது இயக்கம் உழைக்கும்.

அடிப்படையான தனிமனித உரிமைகளும் சுதந்திரங்களும் பேணப்படும் சமூக உலகில் தான், மனித வாழ்வு சிறப்புறும்; முழு மனித விடுதலை சாத்தியமாகும்; மனிதமும் தர்மமும் தழைத்தோங்கும். தனிமனித சுதந்திரங்கள் பேணப்படாமல், சமூக நீதியுடைய சமத்துவ சமுதாயத்தைக் கட்டி எழுப்பமுடியாது. தனிமனித தனித்துவத்தை மறுதலித்து பொருளுலகத்தைச்சீரமைக்க முயன்ற சமூகப் பரிசோதனைகள் தோல்விகளையே சந்திக்கமுடிந்தது.

தமிழீழ சமுதாயம் அந்நிய ஆதிக்கத்தளைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள விழைகிறது. விடுதலையை நோக்கிய இந்த விழைதல், மண் விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல, தனிமனித தமிழன் ஒவ்வொருவனும் தனது ஆன்மீக அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சுதந்திர தேசத்தைக்கட்டி எழுப்புவது தான் எமது விடுதலைப் புரட்சியின் இறுதி இலட்சியமாகும்.

வழிபாட்டு உரிமையைக் கௌரவித்து, எமது மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களுக்காகப் போராடும் எமது விடுதலை இயக்கத்தின் இலட்சியப் போருக்கு, மதங்களும் துணைநிற்கவேண்டும். ஒடுக்கப்பட்ட மனிதர்களின் விடிவிற்காக எமது தேசத்தில் ஒரு தர்மப்போர் நிகழ்ந்து வருகிறது. இந்த சத்திய யுத்தத்திற்கு ஆதரவாக எமது மத நிறுவனங்கள் குரலெழுப்பவேண்டும். சகல மதங்களதும் தவிர்க்கமுடியாத தார்மீகக் கடப்பாடு இது.

மக்களின் விடிவிற்காகத் தனது உயிரை அர்ப்பணிக்கும் ஒரு சுதந்திர வீரனின் தியாகமும் சாராம்சத்தில் புனிதமானது; ஒரு ஆழமான பரிமாணத்தில்ஆன்மீகமானது என்றும், சொல்லலாம். ★

நன்றி :
'விடுதலைப் புலிகள்'

## விமானங்களை விரைவில் வாங்க விமானப்படை அரசிடம் வற்புறுத்து

(கொழும்பு)

சிறிலங்காவின் விமானப் ...

... த்து வருகின்றது. ஆகையினால் ...

ஜனவரி மாதத்திலேயே இங்கு ...

## ஒலிம்பிக் போட்டிகள் நேற்றுமுன்தினம் நிறைவு

(பார்சிலோனா)

இருபத்தைந்தாவது ஒலிம்பிக போட்டிகள் நேற்று முன் தினம் முறைப்படி நிறைவு பெற்றது. உள்ளம் கவரும் ...

நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், 1996ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அட்லாண்டாவில் அடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் சந்திக்கு ...

அதிகாரிகளுக்காக துக்கதினம் அனுஷ்டிக்கும் வகையில் ஒரு நாளை தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்தும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

அதாவது தமது அரசியல் அபிலாசைகளுக்காகவும் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காகவும் இராணுவத் தீர்வொன்றிற்கு ஊக்கமும், ஒத்தாசையும் நிதியும் அளித்துவரும் அரசியற் தலைவர்களையே இவ் இராணுவ உயர் அதிகாரிகளின் மரணம் தடுமாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது,

இதேபோன்றே சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலும் இதன் தாக்கம் பெரிதாக எதிரொலித்தது. இவ் அதிகாரிகளின் மரணம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் ''நாட்டிற்குத் தேசிய மட்டத்தில் ஏற்பட்டதுயரம்'' எனத் தெரிவித்துள்ளது. இதேவேளை ''கண்ணி வெடித்தாக்குதலில் உயிரிழந்த இராணுவத் தளபதிகளுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்பட்டாலும் மிகவும் பயிற்சி பெற்ற இந்த அதிகாரிகள் இல்லாத நிலையை தம்மால் கற்பனைசெய்து பார்க்க முடியவில்லை'' என இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

வேறோர் இராணுவ அதிகாரி ''உயிரிழந்த இராணுவ அதிகாரிகளின் இடத்தை நிரப்பக்கூடிய அதிகாரிகள் சிறிலங்கா இராணுவத்திற்குள் இல்லை. மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரெட்ணா ஆகிய இரு அதிகாரிகளும் இல்லாத வடபகுதி யுத்தம் எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்'' என்றார்.

இவ்வாறாக, இவ் இராணுவ அதிகாரிகளின் இழப்புக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட கருத்துக்கள் தனியாக அவர்களுக்கு அளிக்கப்பட்டபுகழ் மாலைகள் மட்டும் அல்ல. இம்மரணங்களினால் இராணுவதரப்பிற்கும், அதை நம்பியுள்ள அரசியல் தரப்பிற்கும் ஏற்பட்டுள்ள விசனத்தினால் எழுந்தவையுமாகும். அதாவது, தமிழர் தேசிய இனப் போராட்டத்தை இராணுவ ரீதியாகவெற்றிகொள்ள முற்பட்ட சிங்கள இராணுவ - அரசியல் கூட்டாளிகளுக்கு ஏற்பட்ட துயரமாகும்.

இந்நிலையில் இவ்உயர் அதிகாரிகளின் மரணம் என்பது அரசியல் விமர்சகர்களும் செய்தியாளர்களும் தெரிவிப்பது போல விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட வெற்றி மட்டுமல்ல. இது தமிழ்த் தேசிய இனத்திற்கு விடுதலைப் புலிகள் தேடித் கொடுத்த வெற்றி. மரணத்தில் வெற்றி கொண்டாட தமிழர்கள் மனிதாபிமானமற்றவர்கள் அல்ல, ஆனால், மரணமடைந்தவர்கள் அப்பாவிகள் அல்ல அடக்குமுறையின் சின்னங்கள். அதனால் இந்த வெற்றியானது நீண்ட தமிழீழ தேசிய இன விடுதலைப் போரில் ஒரு மைல்கல்.

# விமானங்களை விரைவில் வாங்க விமானப்படை அரசிடம் வற்புறுத்து

(கொழும்பு)

சிறிலங்காவின் விமானப் படைக்கு குறைந்த பட்சம் இரண்டு சரக்கு விமானங்களையாவது உடனடியாக பெற்றுத் தரும்படி விமானப் படை பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுக் கொண்டதாக விமானப்படை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

மூன்றாம் உலக நாடுகளில் போராட்டங்களை நசுக்கப் பாவிக்கப்படும் நவீன ரக விமானங்களையே கொள்வனவு செய்ய வேண்டும் என விமானப் படையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

மேலும் பாதுகாப்புப் படையினர் வடக்குக் கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் போது விமானப் படையினரின் பங்கு பெருமளவில் தேவைப்படுகிறது.

Y-8 சீனச் சகடை விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் பெரும் பின்னடைவை எதிர் நோக்கியுள்ளன.

இந் நிலையில் அமெரிக்கத் தயாரிப்பான ''சாளி 130'' ரக விமானங்களே விமானப்படைக்கு இப்போது தேவைப்படுகின்றன.

இருந்தபோதும் இவற்றைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் ஐரோப்பிய நாடுகளில் இருந்து விமானங்களை பெற்றுக் கொள்வது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது வடக்கு கிழக்கில் பயன்படுத்தப்பட்டு வரும் இத்தாலி தயாரிப்பான ''சியாமா செட்டி'' விமானங்க்ள் புலிகளின் தாக்குதலை எதிர் கொள்ள ஒத்து வராதவை என பாதுகாப்பு வட்டாரங்களில் கருதப்படுகிறது.

போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வேண்டிய நவீன வசதிகளைக் கொண்ட விமானங்களை அமெரிக்காவே தயாரித்து வருகின்றது. ஆகையினால் அமெரிக்க விமானங்களை வாங்குவது உகந்தது என பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன.

விமானங்களை கொள்வனவு செய்ய இப்போது நடவடிக்கை எடுத்தால் இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே இங்கு விமானங்கள் வந்து சேரும்

அதனால் விமானங்களைக் கொள்வனவு செய்ய உடனேயே நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும் என விமானப் படைத் தலைமையகம் பாதுகாப்பு அமைச்சைக் கோரியுள்ளது

## பெருந்தோட்டத்தொழிலாளர் 2000 பேர் வேலையிழப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு பெருந்தோட்ட நிர்வாகத்தை தனியார் மயப்படுத்தி வருகிறது. இதனால் பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த 2000 பேர் தொழில் வாய்ப்பிழக்கும் நிலை உருவாகி உள்ளது என தெரியவருகிறது.

இதேசமயம் சிறிலங்காவில் தேயிலை உற்பத்தியானது 20 சதவீதத்தால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி அடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

1992 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் தேயிலை ஏற்றுமதி வருமானம் 4.7 மில்லியன் ரூபாய்களாகும்.

அதேவேளை கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியில் ஏற்றுமதி வருமானம் 5.7 மில்லியன் ரூபாய்களாகும்.

## மீண்டும் ரொனிடிமெல் அரசியல் பிரவேசம்?

சிறிலங்காவின் முன்னாள் நிதியமைச்சரும், முன்னாள் தெகிநுவர தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ரொனி டீ. மெல்செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் நாடு திரும்பவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

நாடு திரும்பிய, பின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தென் மாகாண அமைப்பாளராக செயற்படவுள்ளார் எனவும், மேற்படி கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவராக இவர் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள்தெரிவித்தன.

பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்தே இவர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உலகத் தமிழ் பண்பாட்டுக் கழக

## ஐந்தாவது மாநாடு சிட்னியில் நடைபெறும்

(கொழும்பு)

உலகத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகத்தின் ஐந்தாவது மாநாடு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தில் நடைபெற இருக்கிறது. அக்டோபர் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நடைபெறும்.

இம்மாநாட்டினை சிட்னியிலுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும், மலேசியா தமிழ் பண்பாட்டுக் கழகமும் நியூசிலாந்துக் கிளையிலுள்ள தமிழ் அமைப்புகளின் கிளைகளும் ஒழுங்கு செய்துள்ளன.

## ஒலிம்பிக் போட்டிகள் நேற்றுமுன்தினம் நிறைவு

(பார்சிலோனா)

இருபத்தைந்தாவது ஒலிம்பிக போட்டிகள் நேற்று முன்தினம் முறைப்படி நிறைவு பெற்றது. உள்ளம் கவரும் இசை, உணர்ச்சிபூர்வ நடனம் உற்சாகமான வாணவேடிக்கை என்பவற்றுடன் இப்போட்டிகளின் நிறைவு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், 1996ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அட்லாண்டாவில் அடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் சந்திக்குமாறு சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் உலக இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## துணை படையை அழைப்பது ஆரோக்கியமானதல்ல

(டில்லி) - ஜேக்கப்

துணை இராணுவப்படைகள் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று மாநிலங்கள் கோருவது அதிகரித்து வருவதாகவும், ஆரோக்கிய மற்ற இப்போக்கு தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்று இந்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் கூறியுள்ளார்.

பி. டி. ஐ. நிருபருக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறுகையில் துணை இராணுவப் படைகளின் சிக்கலான பணிகளைக் கருத்தில் கொண்டே இந்தப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்வதாகவும் குறிப்பிட்டார்.

## மிஸோராமில் மண்சரிவு; 70 பேர் புதையுண்டு மரணம்

(டில்லி)

இந்தியாவின் மிஸோராம் மாநிலத்தின் தென்பகுதியில் நேற்று முன்தினம் நடந்த மண்சரிவினால் குறைந்தது எழுபது பேராவது இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. இச்சம்பவத்தில் காயமடைந்த எட்டுப் பேர் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கல் உடைக்கும் பணியில் தொழிலாளர் ஈடுபட்டிருந்த போது நிலச்சரிவு ஏற்பட்டது எனவும், நினைவுக் கெட்டிய காலவரலாற்றில் நிகழ்ந்த மண்சரிவுகளில் இதுதான் மிக மோசமானது எனவும் தெரிய வருகிறது. முகாம்களில் தங்கியிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை திட்டவட்டமாகத் தெரிய வராததால் இறந்தோர் தொகை மதிப்பிடப்பட முடியவில்லை எனவும் கூறப்படுகிறது. இம் மண்சரிவினால் பதினேழு வீடுகளும் இரண்டு தொழிலாளர் முகாம்களும் முற்றாக சேதமடைந்துள்ளன.

## பி. எல். ஓ. வுடன் தொடர்பு; சட்ட பூர்வமாக்க முடிவு

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான தொடர்புகளை சட்ட பூர்வமானதாக்க இஸ்ரேலிய அரசு முடிவு செய்துள்ளது. இவ் அமைப்புடன் தொடர்புகொள்வதை சட்ட விரோதமானதாக்கும், 1986 ஆம் ஆண்டின் சட்டத்தை திருத்தம் செய்வது என்று இஸ்ரேலிய அரசு தீர்மானித்துள்ளது இதனை இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் டெல் அவிவ்வில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஈழநாதம்

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ். மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக்குழுவினால்நடாத்தப்படும் மாவீரர் தடகள விழா (தியாகி திலீபன் நினைவுக் கேடயத்திற்கானது) வை ஒட்டிய ஆண்கள், பெண்களுக்கான சைகிள் ஓட்டப்போட்டி மரதன் ஓட்டப்போட்டி ஆகியவற்றுக்கான விண்ணப்பமுடிவு திகதி 15.08.92 வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்பத்திரங்களை அவ்வவ்வட்டப்பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். போட்டியாளர்கள் 15.08.92 க்கு முன்னதாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை விளையாட்டுப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# 7,000 இராணுவத்தினர் படையிலிருந்து ஓட்டம்

## 4,000 ஆயுதங்கள் இழப்பு

### கொழும்பு வார இசழ் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் போரிட அஞ்சி இதுவரை 7,000 பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினர் தமது பதவிகளைக் கைவிட்டு ஓடிவிட்டார்கள் என பாதுகாப்பு படையின் நடவடிக்கைபற்றிய விளைவுகளை மதிப்பீடு செய்யும் பகுப்பாய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளதாக கொழும்பு வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது விடுதலைப் புலிகளுக்கும், படைகளுக்குமிடையில் யுத்தம் மீளவும் ஆரம்பித்த நாளான 1990 ஜூலை 11 ஆம் திகதி முதல் காயமடைந்த படையினரில் 6.000 பேர் போர் முனைக்கு மீளவும் திரும்ப முடியாத அளவிற்கு உடல் ஊன முற்றுள்ளனர்.

படையினர் இக்காலப் பகுதியில் நாலாயிரத்திற்கும் அதிகமான ஆயுதங்களை புலிகளிடம் இழந்துள்ளனர் இந்த ஆயுதங்களில் மூவாயிரத்திற்கும் அதிகமான ஆயுதங்கள் தானியங்கி ஆயுதங்கள் ஆகும்

இரண்டாவது ஈழப் போரில் ஈடுபட்டிருக்கும் பாதுகாப்புப் படையினரின் இழப்பு வீதம் அதிவேகமாக அதிகரித்து வருகின்றது. இதனால் தற்போது படையினர் மத்தியில் ஏற்பட்டுள்ள தளர்ச்சியையும், களைப்பையும் போக்கி படையினரின் மனோதிடத்தை உயர்த்துவதற்காக ஓர் உளவியல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கொக்கட்டிச்சோலை படுகொலை

## நூற்றுக்கு மேற்பட்டோருக்கு நட்டஈடு கிடைக்கவில்லை

(மட்டக்களப்பு)

கடந்த வருடம் கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்டவர்களில் நூற்றுக்கு அதிகமான குடும்பங்கள் நிவாரணமோ நட்டஈடோ பெறும் வாய்ப்பினை இழந்துள்ளனர். பயப்பீதியின் காரணமாக அந்த வேளையில் அவர்கள் இடம்பெயர்ந்து சென்றதே இதற்கான காரணம் ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

15-6-91 இல் மட்டக்களப்பு அரச அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் 67 பேர் பலியானதாகவும் 56 பேரைக் காணவில்லையெனவும் 49 பேர் காயம் அடைந்ததாகவும் 141 வீடுகள் சேதமடைந்ததாகவும் 343 வீடுகள் பகுதி சேதமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைக்குழு 18-6-91 இல் நியமிக்கப்பட்டு 30 ஆம் திகதிக்குள் முறையிடவேண்டும் என்று கேட்கப்பட்ட போது 185 பேர் மாத்திரமே முறையிட்டனர் பயப்பீதி காரணமாக இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் முறையிட முடியாமல் போய்விட்டது. இவர்களின் பாதிப்புகள் குறித்து கிராமசேவை அலுவலர்கள் உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோர் உறுதிப்படுத்தியும்கூட இவர்களுக்குரிய நட்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. இதனால் இம்மக்கள் மேலும் பாதிப்படைந்த நிலையில் உள்ளனர்.

பார்சிலோனா ஒலிம்பிக்

## சுதந்திரக் குடியரசுகளின் பொதுநலவாயம் முதலிடம்

(பார்சிலோனா)

ஸ்பெயினில் பார்சிலோனா நகரில் நடந்த 25-வது ஒலிம்பிக் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்த நிறைவு விழா நிகழ்ச்சிகளுடன் முடிவுபெற்றது.

இந்தப் போட்டிகளில் முன்னணி பெற்ற நாடுகளின் பதக்க விபரங்கள்;

ஒன்றிணைந்த ரஷ்ய அணி 45 தங்கப்பதக்கங்களுடன் மொத்தம் 112 பதக்கங்கள் பெற்று முதலாவது இடத்தை பெற்றுள்ளது. அமெரிக்கஅணி 37 தங்கப்பதக்கங்களுடன் மொத்தம் 108பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தை பெற்றது. ஜேர்மனி அணி 36 தங்கப்பதக்கங்கள் பெற்று மொத்தம் 82 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்திலும், சீன அணி 14 தங்கப் பதக்கங்கள் பெற்று மொத்தம் 54 பதக்கங்களுடன் நான்காம் இடத்திலும், கியூபா 14 தங்கப் பதக்கங்களுடன் மொத்தம் 31 பதக்கங்களுடன் ஐந்தாம் இடத்தையும் ஸ்பெயின்அணி 13 தங்கப்பதக்கங்கள் பெற்று ஆறாவது இடத்தையும் பெற்றுள்ளது.

## வவுனி. சோதனைசாவடியில் கெடுபிடி அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் சோதனைச்சாவடியில் பயணிகள் மீதான கெடுபிடிகள் நேற்று அதிகரித்துக் காணப்பட்டன.

வவுனியாவில் யாழ்ப்பாணம் வருவதற்கென காத்திருந்த பல தமிழ் இளைஞர்கள் தேசவிரோதக் கும்பல்களினால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

வவுனியா நகர்ப்புறத்தில் தொழில் நிமிர்த்தம் தங்கியிருந்த இளைஞர்களும் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்

இதே வேளை வவுனியா இராணுவமுகாம்களில் இருந்து எறிகணைவீச்சு இடம்பெற்றது. இவை தொலைதூரங்களிலுள்ள தமிழர் குடியிருப்புகள் மீது வீழ்ந்து வெடித்தன.

## கடற்படையால் கைதான மீனவர் இருவர் விடுதலை

(வவுனியா)

முல்லைத்தீவுப்பகுதிக்கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரு தமிழ் மீனவர்கள் விடுதலையானார்கள்.

இவர்கள்இருவரும் அனுராதபுரம் இராணுவ முகாமில் பதினைந்து நாட்கள் வரை தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

தங்கராசா தெய்வேந்திரன் (வயது 37) முதலாம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, சாமிநாதன் அன்ரனி (வயது 34) அம்பவன் பொக்கனை ஆகிய இருவருமே கைதானவர்கள்

கடந்த மாதம் 21 ஆம் திகதி கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் முல்லைத்தீவு இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அனுராதபுரம் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர் கடந்த 6 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். (தி

## 3ஆவது தொகுதி அகதிகள் இலங்கை திரும்பினர்

இந்தியாவில் இருந்து 132 தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு இந்தியன் எயர் லைன்ஸ் விமானம் ஒன்று நேற்றுப் பிற்பகல் சென்னையில் இருந்து திருமலைக்கு வந்து சேர்ந்ததாய் தெரியவருகின்றது.

கொழும்பில்

பொலிசார் உசார் படுத்தப்பட்டுள்ளனர் தமிழருக்கெதிரான கலவரம் கொழும்பில் கட்டவிழ்த்து விடப்படலாம் என அஞ்சப் படுவதால் பொலிசார் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று பொலிஸ் தரப்பில் சொல்லப்

படைத் தளபதி

லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணாவும், சிறிலங்காவின் கடற்படை தளபதியும் மேலும் சில சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் வடபகுதிககு வந்துள்ளதாய் தெரியவருகின்றது.

## யாழ்நகரில் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள்

ஆய்வுக்கட்டுரைகள் எழுதும் பிரபல பத்திரிகையாளர் திரு ஏடட்லி என்ற இலண்டன் பத்திரிக்கையாளர் நேற்றுமுன்தினம் யாழ் வந்தார். இந்த


## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரஜனனம் 05 - 05 - 1975



வீரச்சாவு 28 - 06 - 1992

### லெப். வீரமணி தீபன்ராஜ்

(குணரட்னம் ஸ்ரீறஞ்சன்)

வேங்கைகள் அணியில் விருப்புடனிணைந்து
எங்களின் மைந்தனே! தங்கமே! செல்வமே!
தாயக மண்ணிது தலைநிமிரும் நாள்வரும் உன்
பாதச் சுவடுகளில் எம்பாதம் பயணிக்கும்

அரசடி ஒழுங்கை,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்

[2999]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்
09-07 1972

வீரச்சாவு
23-07-1991

திதி
11 08-1992



எங்கள் உயிரோடும், உதிரத்தோடும் ஒன்றாகக் கலந்துவிட்ட இறுதி இலட்சியமாம் தமிழீழத் தாயகத்தை மீட்டெடுக்கும் புனிதப் போரிலே வீரச்சாவடைந்த

### கப்டன் பாண்டியன்

(துரைசிங்கம் கிருஷ்ணகுமார்)

(புறாஸ்லி)

வடலியூர் ஈன்றெடுத்த மாவீரா !
உன் உடலில்தான் எத்தனை விழுப்புண்களப்பா
கடும்சமரில் கட்டைக்காட்டில் கப்டன் பாண்டியா !

## 45-ம் நாள் நினைவஞ்சலி

## 45-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்: 23.11.1970

வீரச்சாவு: 23.06.1992

### 2-ம் லெப். எல்லாளன்

(அன்சார்)

(யேசுதாசன் கனிஸ்ரஸ் பிலேந்திரன்)

இலட்சிய வேங்கையே

நாளை தமிழீழம் பிறக்கும்
மாவீரனே உன்
கல்லறை பிளக்கும்
ஈழமண் ஆனந்த
கண்ணீர் வடிக்கும் — அதில்
வீரனே உன்
விதை முளைக்கும் — இதை
எண்ணி நகைத்தவர்
இதயம் பிளக்கும்
இனியும் அடிமைகள்
இல்லையென ஈழமண்
முரசு முழங்கும் — இது
ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் ஒலிக்கும்
மாவீரனே அன்சார் — நீ
காவித் திரிந்த கனவுகளை
காவிய மாக்கிட
களத்தினில் நாங்கள்
என்றும் உன்
பாதையில் தொடர்வோம்

(2996) சகபோராளிகள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

வடலியூர் ஈன்றெடுத்த மாவீரா !
உன் உடலில்தான் எத்தனை விழுப்புண்களப்பா
கடும்சமரில் கட்டைக்காட்டில் கப்டன் பாண்டியா !
காலனுக்கேன் இரையானாய் ஐயா !

தாயிற் சிறந்த தாய்நாடு மீட்க
நீ சாவை மதிக்காது சமர் புரிந்தாய்
வேண்டிய தமிழீழம் கிடைக்கு முன்
உன் வீரச்செயலை நாடு மதிக்கும்

காட்டிய உன் தீரம்கண்டு கிருஷ்ணகுமாரே !
நாட்டில் உள்ளோர் பெருமைப்பட்டார்
வீட்டில் உள்ள பெற்றோர் நண்பர்கள் புறூஸ்லியை
எந்நாள் காண்போம் என ஏங்குகின்றார்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர், மருமகள்,
மாமன்மார், சகபோராளிகள்

(2995)

## மரண அறிவித்தல்

### கதிரேசு தில்லையம்பலம்

[மிருணா உரிமையாளர்]

கதிரேசு தில்லையம்பலம் 10-08-92இல் காலமானார். இவர் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், கனகாம்பிகை, திருமதி தங்கமலர் (பிரான்ஸ்). ரஞ்சினிதேவி (பிரான்ஸ்), தர்மராணி, சரோஜினிதேவி (ஜேர்மனி), வரதராசா இவர்களின் அன்புத் தகப்பனாரும், வினாயகமூர்த்தி (கந்தர்மடம்), இராசேந்திரம் (பிரான்ஸ்), பரமலிங்கம் (பிரான்ஸ்), சுந்தசாமி (கந்தர்மடம்), கெங்காதரன் (ஜேர்மனி), திருமதி சுமதி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், ராஜநாயகி, ரமேஸ்வரன், ராதிகா, ராஜன், அஞ்சனா, மோகனா, துஸ்யந்தன், மிருனா, சுதர்சன், பிரசாத், அனுஜியா, வதனா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கந்தர்மடம் No 4. பழம் வீதி, இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10-08-92 திங்கட்கிழமை (நேற்று) பிற்பகல் 4 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

No. 4. பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

செ. கந்தசாமி
(மருமகன்)

[3000]

சார் உசார் நிலையில் வைக்கப் பட்டுள்ளார்கள் என்று பொலிஸ் தரப்பில் சொல்லப் படுகிறது. கொழும்பில் தமிழர் வாழும் பகுதிகளில் அதிகமான பொலிசார் கடமையில் ஈடு படுத்தப் பட்டுள்ளதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

### ஜெட்

இவ்வாறு வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது

இக்குண்டு வீச்சுக்களால் நாவற்குழி பிரதான வீதியைச் சேர்ந்த சின்னத்துரை ஈஸ்வரி (வயது 28) என்ற கர்ப்பிணிப் பெண் பலியானார். இவரது கணவன் கந்தன் சின்னத்துரை (வயது31)பிள்ளைகளான றாஜி (வயது 9), றாஜீயா (வயது 8) றஜீதா(வயது 7)ஆகியோர்படுகாயமடைந்துயாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இ. கிருஸ்ணகுமார் (வயது 22) என்பவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

என். என் ஆர் அரிசிஆலை, ஜெயராம், சின்னத்துரை, வைரப்பன் திருஞானசம்பந்தர் மாணிக்கம் ஆகியோரது வீடுகள் சேதமடைந்துள்ளன. விமானங்கள் வீசிய குண்டுகளினால் கண்டி வீதியில் பாரிய குழியொன்று ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி யூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

அப்பகுதியில் நான்கு பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன ஒரே யிடத்தில் இரண்டு குண்டுகள் அடுத்தத்நது வீழ்ந்து வெடித்தன

அப்பகுதியிலுள்ள லக்சபான மின்சாரத்தை எடுத்துவரும் பாரிய மின்கம்பங்கள் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

இதேவேளை புலிகளால் மீட்கப்பட்ட வெடிக்காத குண்டொன்று குடாநாட்டின் பலஇடங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டது.(35),10),பா

பகுதிககு வந்துள்ளதாய் தெரியவருகின்றது.

### இணக்க மன்று

டுள்ள தீர்ப்புகளை உதாசீனம் செய்யும் வகையில் யாராவது செயற்பட்டால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படும் எனபதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திரு ஏடட்லி என்ற இலண்டன் பத்திரிக்கையாளர் நேற்றுமுன் தினம் யாழ் வந்தார். இந்த பத்திரிகையாளர் தெல்லிப் பழையில் நடந்த விமான தாக்குதல்கள் பற்றி தான் நேரில் கண்டதும் அதிர்ச்சியடைந்ததாகவும் பல அகதி முகாம்களுக்கு சென்று பார்வையிட்ட பின் தான் மனவருத்தமடைத்தாகவும் அவர் மேலும் கூறினார் (75)

சகல பாண் உற்பத்தியாளர்கட்கும்

### கலந்துரையாடல்

இடம்: விடுதலைப்புலிகள் அரசியல்துறை மாவட்ட செயலகம் கோண்டாவில்.
காலம்: 12.08 1992 புதன்கிழமை காலை 10.00
விடயம்: பாண் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள், இதுவரை சங்கத்தில் பதிவு செய்யப் படாமல் இயங்கும் பேக்கரி உரிமையாளர்கள் சகலரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றனர்

த.சிவசுப்பிரமணியம்
தலைவர்
பேக்கரி உரிமையாளர் சங்கம்
யாழ் மாவட்டம்

[2998]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

10-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5215

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;

28-6853, 22-6746, 41-1996, 24-1040, 28-6963, 24-9938, 26-2786, 27-1494, 26-5281, 26-4691, 40-2573, 24-5457, 25-1334, 22-8175, 36-4438.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

24-8212, 24-922, 37-4077, 36-9272, 36-4238, 36-779, 25-9869, 25-3708, 25-6319, 36-6028, 25-1025, 25-3757, 25-7772, 25-1908, 25-6900, 36-8010, 25-6896.